# மெட்ரோ ரயில் நிலையங்களில் மினி பஸ் சேவை அறிமுகம்

சென்னை, ஜூலை 30–

சென்னையில் கூடுதலாக மேலும் 3 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து பயணிகளின் வசதிக்காக மினி பஸ் சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் மொத்தம் 32 மெட்ரோ ரயில் நிலையங்கள் உள்ளன. இந்த நிலையங்களில் இருந்து பயணிகளின் வசதிக்காக கடந்த ஆண்டு முதல் சேவைகள் குறிப்பிட்ட 3 கி.மீட்டர் தூரத்திற்கு இயக்கப்படுகிறது. அதன்படி, ஷேர் ஆட்டோவிற்கு ₹5ம், ஷேர் டாக்சி சேவைக்கு ₹10ம் கட்டணமாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், கோயம்பேடு, வடபழனி, அசோக் நகர் மற்றும் ஆலந்தூர் ஆகிய 4 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து 14 மினி பஸ்கள் இயக்கப்படுகின்றன. தற்போது 5 வழித்தடங்களில் கூடுதலாக 11 சேவைகள் நேற்று முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, வண்ணாரப்பேட்டை, எல்.ஐ.சி, ஏஜிடிஎம்எஸ் மற்றும் ஆலந்தூர் நிலையங்களில் இருந்து கூடுதலாக சேவை இயக்கப்படுகிறது. குறிப்பாக, ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையம் முதல் டி.எல்.எப் வரையிலும், எல்.ஐ.சி மெட்ரோ நிலையம் முதல் விவேகானந்தர் இல்லம் வரையிலும், ஏ.ஜி.டி.எம்.எஸ் மெட்ரோ நிலையம் முதல் நுங்கம்பாக்கம் ரயில் நிலையம் வரையிலும், வண்ணாரப்பேட்டை மெட்ரோ நிலையம் முதல் ஐ.ஓ.சி மற்றும் எழும்பூர் ரயில் நிலையம் வரையிலும் இந்த சேவை அறிமுகப்பட்டது.